*அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம்*
*International Institute of Tamil Arts*

# தமிழ்க்கலைத் தேர்வு - 2023

பாடம்: நடனம் (பரதம்) தரம்: மூன்று

**நேரம்: மூன்று மணித்தியாலங்கள் (இரு பகுதிகளுக்கும்)**

## பகுதி ஒன்று

சுட்டெண்:......................

**பகுதி I இல் தரப்பட்டுள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.**
**பகுதி II இல் எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.**

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. பரத நாட்டிய உருப்படியில் முதலாவதாக இடம்பெறும் நிருத்த உருப்படி
   அ. ஸப்தம் ஆ. அலாரிப்பு
   இ. ஜாவளி ஈ. வர்ணம்

2. அபிநயதர்ப்பணம் என்னும் நூலின் ஆசிரியர்
   அ. பரதமுனிவர் ஆ. நந்திகேஸ்வரர்
   இ. ஆனந்தகுமாரசாமி ஈ. உஷை

3. சங்கீர்ண ஜாதியில் இருந்து கண்டஜாதியை கழிக்கும் போது உருவாவது
   அ. தகிட ஆ. தகதிமி
   இ. தகிடதகதிமி ஈ. தகதிமிதகதகிட

4. மன்மதன் வில், தூண் ஆகியவற்றை அபிநயிக்க பிரயோகிக்கும் முத்திரை
   அ. சிகரம் ஆ. பதாகம்
   இ. அலபத்மம் ஈ. தாம்ரசூடம்

5. பஞ்ச பாணங்களில் மிகவருத்தம், சோகம் உண்டாக்கும் பாணம்
   அ. நீலோற்பலம் ஆ. தாமரை
   இ. அசோகம் ஈ. முல்லை

6. ப்ரம்மா இருக்கு வேதத்தில் இருந்து பிரித்தெடுத்த வேதசாரம்
   அ. அபிநயம் ஆ. இசை
   இ. பாட்டியம் ஈ. ரஸம்

7. ஜதீஸ்வரத்தின் ஆரம்பத்தில் இடம்பெறுவது

அ. கோர்வை | ஆ. அடவு
இ. அறுதி | ஈ. தீர்மானம்

8. நாட்டியம் எத்தனையாவது வேதமாகத் தொகுக்கப்பட்டது?

அ. 5வது | ஆ. 3வது
இ. 4வது | ஈ. 1வது

9. மலர்ந்த தாமரை, கொண்டை, அழகு என்பவற்றை அபிநயிக்க உபயோகிக்கும் முத்திரை

அ. காங்கூலம் | ஆ. ஹம்ஸாஸ்யம்
இ. அலபத்மம் | ஈ. ம்ருகசீர்ஷம்

10. பார்வதி, லாஸ்யத்தை முதலில் கற்றுக் கொடுத்தது

அ. துவாரகபெண்கள் | ஆ. தண்டுமுனிவர்
இ. பாணாசுரன் | ஈ. உஷை

11. "கிடதகதரிகிடதொம்" அமைந்துள்ள தாளம்

அ. ஆதி | ஆ. ரூபகம்
இ. ஜம்பை | ஈ. ஏகம்

12. தாம்ர சூட விநியோகமானது

அ. கிளி | ஆ. இறகு
இ. மான் | ஈ. மயில்

13. அஸம்யுத ஹஸ்தத்தின் 5வது முத்திரையின் விநியோகம் ஒன்று

அ. மரணம் | ஆ. வாந்தி எடுத்தல்
இ. பூ பறித்தல் | ஈ. கொண்டை

14. தண்டு முனிவர் தாண்டவத்தை கற்றுக் கொடுத்த முனிவர்

அ. பரதமுனிவர் | ஆ. வியாசமுனிவர்
இ. பதஞ்சலிமுனிவர் | ஈ. நாரதர்

15. அலாரிப்பில் இடம்பெறும் தத்தெய்தாஹா

அ. 1வது | ஆ. 2வது
இ. 3வது | ஈ. 4வது

16. கோர்வையின் இறுதியில் இடம்பெறும் அடவுகள்

அ. நாட்டடவு, தட்டி மெட்டடவு

ஆ. கிடதகதரிகிடதொம், ததிங்கிணதொம்

இ. குதித்து மெட்டடவு, நாட்டடவு

ஈ. பக்கஅடவு, நாட்டடவு

17. கைவழி கண்கள் செல்ல, கண்வழி ……..

அ. உணர்வு ஆ. பாவம்

இ. மனம் ஈ. கை

18. "கூட்டம் வயிறு" அபிநயிக்க பிரயோகிக்கும் முத்திரை

அ. கபோதம் ஆ. கர்க்கடகம்

இ. சங்கு ஈ. அவகித்தம்

19. பின்வருவனவற்றில் எப்பொழுதும் சாபுதாளத்தில் இடம்பெறும் உருப்படி

அ. அலாரிப்பு ஆ. ஸப்தம்

இ. ஜதீஸ்வரம் ஈ. கீர்த்தனம்

20. "உக்கிரமான கோபம்" என்பதை குறிப்பதற்கு பயன்படும் பொருத்தமான சிரோ, த்ருஷ்டி பேதம்

அ. அனுவிருத்தம் - பரிவாகிதம் ஆ. கம்பிதம் - அனுவிருத்தம்

இ. ஆலோலிதம் - ஸாசி ஈ. யாவும் பொருத்தமற்றவை

21. பாவம் உள்ள இடத்தில் தோன்றுவது

அ. லயம் ஆ. ரஸம்

இ. தாளம் ஈ. நாட்டியம்

22. "நாட்டிய கிரமம்" என்பது

அ. நாட்டிய ஒழுங்குமுறை ஆ. பரதலட்சணம்

இ. நடனத்தின் உட்பிரிவுகள் ஈ. மேற்கூறப்பட்ட மூன்றும் சரி

23. நாட்டிய வரன் முறையில் வாயினால் பாட்டை இசைக்க கைகளினால் வெளிப்படுத்துவது

அ. பாவம் ஆ. ரஸம்

இ. கருத்து ஈ. ராகம்

24. சண்டை சங்கிலி இவற்றைக் காட்ட பிரயோகிக்கும் முத்திரை

அ. கீலகம் ஆ. சம்புடம்

இ. பாசம் ஈ. பேருண்டம்

25. “ஏவம் கிருத்வா பூர்வரங்கம்” …. இத்தொடர்

அ. புஷ்பாஞ்சலி ஆ. நாட்டியகிரமம்

இ. அரங்கதேவதாஸ்துதி ஈ. த்யானஸ்லோகம்

26. நாட்டிய தோற்றம் பற்றிய அறிமுகம்

அ. புஷ்பாஞ்சலி ஆ. நாட்டியகிரமம்

இ. புராணவரலாறு ஈ. தசாவதாரம்

27. ஒரு உருப்படி பல இராகங்களைக் கொண்டு பாடப்படுவது

அ. தாள மாலிகை ஆ. இராக மாலிகை

இ. ராகம் ஈ. தாளம்

28. “ஸம்யுதம்” என்பதன் பொருள்

அ. இணையாதது ஆ. இணைந்தது

இ. விரிந்தது ஈ. பண்பட்டது

29. நீர் கற்ற அலாரிப்பு அமைந்துள்ள இராகம் தாளம் முறையே

அ. நாட்டை – திஸ்ரஏகம் ஆ. மாயாமாளவகௌளை – திஸ்ரஏகம்

இ. நாட்டை – மிஸ்ரசாபு ஈ. நாட்டை – கண்டசாபு

30. அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகத்தை ஆரம்பித்து வைத்த கல்வி நிறுவனம்

அ. கிழக்கு இலங்கை பல்கலைக்கழகம் ஆ. யாழ் பல்கலைக்கழகம்

இ. தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து ஈ. அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

(30×1=30 புள்ளிகள்)

IITA

# அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம்
# International Institute of Tamil Arts

## தமிழ்க்கலைத் தேர்வு - 2023

பாடம்: நடனம் (பரதம்) தரம்: மூன்று

### பகுதி இரண்டு

**நேரம்: மூன்று மணித்தியாலங்கள் (இரு பகுதிகளுக்கும்)**

**விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

1. அ. நீர் கற்ற சப்தத்தின் இராகம், தாளம் என்பனவற்றைக் குறிப்பிடுக.

   ஆ. நீர் கற்ற சப்தத்தின் கண்டிகையின் ராகங்களை தருக.

   இ. நீர் கற்ற சப்தத்தின் கண்டிகை (ஏதேனும்) ஒன்றினை எழுதுக. (14 புள்ளிகள்)

2. பின்வரும் ஹஸ்தங்களின் விநியோகங்களைத் தருக.

   அ. கடஹாமுகம் ஆ. கபித்தம் இ. அலபத்மம்

   ஈ. புஷ்பபுடகம் உ. கர்தரீமுகம் ஊ. அவகித்தம்

   (14 புள்ளிகள்)

3. நாட்டியத் தோற்றம் எத்தனை வகைப்படும்?
   அதில் நீர் விரும்பிய ஒரு தோற்றத்தினை விளக்குக. (14 புள்ளிகள்)

4. பின்வரும் எண்ணக்கருக்களின் விளக்கத்தைத் தருக.

   அ. ஜாதி ஆ. லோகதர்மி

   இ. பஞ்சபாணம் உ. அட்சரம் (14 புள்ளிகள்)

5. உமக்கு தெரிந்த பதினான்கு நாட்டிய நூல்களையும், அவற்றின் ஆசிரியரின் பெயர்களையும் தருக.

   (14 புள்ளிகள்)

6. நாட்டியக் கிரமத்தின் இரண்டு ஸ்லோகத்தினையும், அவற்றின் கருத்தினையும் தருக.

   (14 புள்ளிகள்)

7. நீர் கற்ற ஜதீஸ்வரத்தின் இராகம், தாளம் என்பவற்றை குறிப்பிட்டு அதில் நீர் விரும்பிய கோர்வை ஒன்றினை தாள அங்க அடையாளங்களுடன் எழுதுக.

   (14 புள்ளிகள்)